# அக்டோபர் – 26 – வியாழன்

தூய அவரிஸ்டால்

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்: திபா. 1:6**

## முதல் வாசகம் : உரோமையர் 6 : 19 - 23

சகோதர சகோதரிகளே! நீங்கள் வலுவற்றவர்கள் என்பதை மனதிற்கொண்டு எளிய முறையில் பேசுகிறேன். முன்பு கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு வழிவகுக்கும் கெட்ட நடத்தைக்கும் நெறிகேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை நீங்கள் அடிமையாக்கியிருந்தீர்கள். அதுபோல இப்பொழுது தூய வாழ்வுக்கு வழிவகுக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உங்கள் உறுப்புகளை அடிமையாக்குங்கள்.நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாய் இருந்தபோது கடவுளுக்கு ஏற்புடையவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கவில்லை.அப்போது நீங்கள் செய்த செயல்களை எண்ணி இப்போது நீங்களே வெட்கப்படுகிறீர்கள். அவற்றால் நீங்கள் கண்ட பயன் யாது? அவற்றின் முடிவு சாவு அல்லவா?ஆனால் இப்பொழுது, நீங்கள் பாவத்தினின்று விடுதலை பெற்றுக் கடவுளுக்கு அடிமைகள் ஆகிவிட்டீர்கள் இதனால் நீங்கள் காணும் பயன் தூய வாழ்வு. இதன் முடிவு நிலைவாழ்வு.பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு.

**பதில்பாடல் :** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர்
பேறு பெற்றோர்

## நற்செய்தி : லூக்கா 12 : 49 - 53

அக்காலத்தில் இயேசு தம் சீடர்னளை றோக்கிக் கூறியதாவது: "மண்ணுலகில் தீமூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.ஆயினும் நான் பெற வேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன்.மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன்.இது முதல் ஒரு வீட்டிலுள்ள ஐவருள் இருவருக்கு எதிராக மூவரும் மூவருக்கு எதிராக இருவரும் பிரிந்திருப்பர்.தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமியார் தன் மருமகளுக்கும், மருமகள் மாமியாருக்கும் எதிராகப் பிரிந்திருப்பர்" என்றார்.

**தியானம்:** ஆண்டவர் இயேசு பிலாத்து முன்பாக நிறுத்தப்பட்ட போது அவன் இயேசுவிடத்தில் நீ அரசன்தானா என்று கேட்டார். அதற்கு இயேசு அவனிடத்தில் அரசன் என்று நீர் சொல்லுகின்றீர் .உண்மையை எடுத்துரைப்பதே என்னுடைய பணி. இதற்காகவே நான்பிறந்தேன். உண்மையை சார்ந்த அனைவரும் என்குரலுக்கு செவிசாய்க்கின்றனர் என்பார். (யோவா18:31) இயேசு இந்த உலகத்திற்கு வந்தது உண்மையை எடுத்துரைக்க. அவர் வழியில் நாம் நடக்கின்ற போது நாமும் அவருடைய உண்மையான சீடர்களாகுவோம் என்பது உறுதி. இப்படி உரைக்கும் போது இன்றைய வாசகத்தில் கூறுவது போல குடும்பங்களில் குழப்பமான சூழ்நிலை நிலை தான் உருவாகும். ஆதனால் ஏற்படும் சவால்களை வீறு கொண்டு எதிர் கொள்வோம். அதன்வழியாக இறைவன் அழிக்கும் முடிவில்லா வாழ்வை கொடையாக பெற்றுக் கொள்வோம்.